Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 155 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW : 2

| | | | |
|---|---|---|---|
| Name | ஈஸ்வரன் | Caste | |
| Father/Husband's Name | முத்துக்காளை | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் கூமாப்பட்டி அமச்சியார்புரத்தில் வசித்து வருகிறேன். நான் கோழிப்பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். வழக்கின் எதிரியை எனக்கு தெரியும். எதிரியின் தங்கைக்கும் எனது மகனுக்கும் காதலிப்பது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 17.03.2022 ம் தேதி அ.சா.1 ஐ அரிசி மூடை தூக்குவதற்காக கடைக்கு போக சொல்லியிருந்தேன். இரவு 7.45 மணியளவில் எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. வழக்கின் எதிரி அ.சா.1 ஐ வெட்டிவிட்டதாக முத்தையா என்பவர் என்னிடம் தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு உடனே சென்றேன் அங்கு எனது மகனுக்கு இடது கையில் முழங்கையில் காயமும், வலது நெற்றில் காயமும் ஏற்பட்டது. காயம்பட்ட எனது மகனை வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது மகன் வீட்டிற்கு முன்பு போன் பேசிக்கொண்டிருக்கும் போது காதல் பிரச்சினை முன்விரோதம் கொண்டு பின்புறம் வந்து அருவாளை வைத்து நெற்றி மற்றும் முழங்கையில் வெட்டினார். வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் எனது மகனிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு